தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வளர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
NEWS
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009

ஆனந்த பாஸ்கர்
PRGI No: TNMUL/25/A1387
உதயத்தில் உங்களுடன் காலை நாளிதழ்
ANANDA BHASKAR
www.anandabhaskar.com




சென்னை மலர்: 01 இதழ்: 130 05.11.2025 புதன்கிழமை
Chennai Volume: 01 Issue: 130 Wednesday pages 4 Rs.5/-

## இன்றைய நாள்

புதன்கிழமை
(5–11–2025)
விசுவாவசு ஆண்டு, ஐப்பசி–19
பிறை: வளர்பிறை
திதி
பௌர்ணமி இரவு 7.27 வரை
பிறகு பிரதமை.
நட்சத்திரம்:
அசுவினி காலை 10.14 வரை
பிறகு பரணி
யோகம்
மரண/சித்தயோகம்
ராகுகாலம்
நண்பகல் 12.00–1.30 மணி
எமகண்டம்
காலை 7.30 – 9.00 மணி.
சூலம் –வடக்கு.
நல்ல நேரம் :
காலை 6–7 மணி.
மாலை 4–5 மணி.

| | |
|---|---|
| மேஷம் | அமைதி |
| ரிஷபம் | ஊக்கம் |
| மிதுனம் | நட்பு |
| கடகம் | உவகை |
| சிம்மம் | ஈகை |
| கன்னி | ஆதரவு |
| துலாம் | அன்பு |
| விருச்சிகம் | ஆசை |
| தனுசு | சுகம் |
| மகரம் | பெருமை |
| கும்பம் | நற்செயல் |
| மீனம் | வெற்றி |

# பிஹாரில் முதல்கட்ட தேர்தல் பிரச்சாரம் ஓய்ந்தது

## நாளை வாக்குப்பதிவு



பாட்னா,நவ.5:

பிஹாரில் முதல்கட்ட சட்டப்பேரவை தேர்தலுக்கான பிரச்சாரம் நேற்று மாலையுடன் முடிவடைந்தது. இதன் காரணமாக தேசிய ஜனநாயகக் கூட்டணி மற்றும் மகா கூட்டணியின் தலைவர்கள் நேற்று தீவிரப் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

243 தொகுதிகளைக் கொண்ட பிஹார் சட்டப்பேரவை தேர்தலுக்கான வாக்குப்பதிவு நவம்பர் 6 மற்றும் 11-ம் தேதிகளில் இரு கட்டங்களாக நடைபெறுகிறது. இதில் நவம்பர் 6-ல் முதல்கட்ட வாக்குப்பதிவு நடைபெறும் 18 மாவட்டங்களில் உள்ள 121 சட்டப்பேரவைத் தொகுதிகளில் நேற்று மாலை 5 மணியுடன் பிரச்சாரம் முடிவடைகிறது. இந்தச் சூழலில், வாக்காளர்களை கவரும் வகையில் தேசிய ஜனநாயக கூட்டணி மற்றும் மகா கூட்டணியின் தலைவர்கள் நேற்று தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

பாஜக தேசியத் தலைவர் ஜே.பி. நட்டா நேற்று போஜ்பூர் மற்றும் கயாவில் தேர்தல் பிரச்சாரங்களில் உரையாற்றுகிறார். பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் வைஷாலி, பாட்னா, சஹர்சா மற்றும் முங்கர் மாவட்டங்களில் நடக்கும் பிரச்சாரக் கூட்டங்களில் உரையாற்றுவார். மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தர்பங்கா, கிழக்கு சம்பாரண் மற்றும் மேற்கு சம்பாரண் மாவட்டங்களில் தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் செய்கிறார்.

பிரதமர் நரேந்திர மோடி நேற்று (நவம்பர் 4) பிஹாரில் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியின் பெண் தொண்டர்களுடன் கலந்துரையாடுகிறார். பிரதமர் மோடியின் எக்ஸ் பதிவில், “பிஹாரில் பெண்கள் சக்தி சட்டப்பேரவை தேர்தல்களில் பாஜக - தேசிய ஜனநாயகக் கூட்டணியின் வெற்றியை உறுதி செய்வதற்காக அசாதாரண ஆற்றலுடனும் அர்ப்பணிப்புடனும் செயல்பட்டு வருகிறது. தேர்தல் பிரச்சாரத்தில் பெண்களின் பங்கேற்பு பிஹாரில் ஜனநாயகத்தை மேலும் வலுப்படுத்துகிறது” என்று அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரச்சாரத்தின் இறுதி நாளான நேற்று மகா கூட்டணியின் மூத்த காங்கிரஸ் தலைவர்கள் கயா மற்றும் ஔரங்காபாத்தில் பிரச்சாரம் செய்வார்கள். மகாகட்பந்தனின் முதல்வர் வேட்பாளர் தேஜஸ்வி பிரசாத் யாதவ், சமஸ்திபூர், பெகுசராய், சஹர்சா, தர்பங்கா, முசாபர்பூர் மற்றும் வைஷாலி மாவட்டங்களில் உள்ள பல்வேறு தொகுதிகளில் 17 தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் உரையாற்றுகிறார். அதேபோல மகா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ் கயாவில் ஒரு பொதுக் கூட்டத்தில் உரையாற்றுகிறார்.

## பொங்கல் பண்டிகைதோறும் மகளிர்க்கு ரூ.30,000 நிதியுதவி: தேஜஸ்வி யாதவ் வாக்குறுதி

பொங்கல்பண்டிகைதோறும் மகளிர்க்கு ரூ.30,000 நிதியுதவி வழங்கப்படும் என்று மகா கூட்டணியின் முதல்வர் வேட்பாளர் தேஜஸ்வி யாதவ் தெரிவித்துள்ளார்.

நாங்கள் ஏற்கெனவே பெண்களுக்காக அறிவித்த திட்டங்களை தாய்மார்களும் சகோதரிகளும் அதிக அளவில் வரவேற்றுள்ளனர். வரும் ஜனவரி 14-ம் தேதி மகர சங்கராந்தி பண்டிகை வர இருக்கிறது. இது மக்களுக்கு ஒரு புதிய ஆண்டு. பெண்களுக்காக நாங்கள் அறிவித்த திட்டத்தின் கீழ் மகர சங்கராந்தியின்போது பெண்களின் வங்கிக் கணக்குகளில் தலா ரூ.30,000 வரவு வைக்கப்படும். ஒவ்வொரு ஆண்டும் மகர சங்கராந்தியை முன்னிட்டு இந்த நிதியுதவி வழங்கப்படும். அந்த வகையில் இந்த திட்டத்தின் மூலம் அடுத்த 5 ஆண்டுகளில் நமது பெண்கள் ரூ.1.5 லட்சம் நிதி உதவி பெறுவார்கள். பணவீக்கம் காரணமாக மக்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த நிதியுதவி அவர்களுக்கு நிச்சயம் பயனுள்ளதாக இருக்கும்.

பிஹாரை கட்டியெழுப்புவதே எங்கள் நோக்கம். இதைக் கருத்தில் கொண்டு விவசாயிகளை முன்னேற்றுவதற்காக பல்வேறு நடவடிக்கைகளை நாங்கள் எடுக்க இருக்கிறோம். எங்கள் அரசாங்கம் அமைந்த உடன், விவசாய பாசனத்துக்கு இலவச மின்சாரம் வழங்கப்படும். நெல் மற்றும் கோதுமைக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையுடன் கூடுதலாக முறையே ரூ.300 மற்றும் ரூ. 400 வழங்கப்படும். அரசு ஊழியர்கள், காவல்துறையினர், சுகாதாரப் பணியாளர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் 70 கிலோ மீட்டர் சுற்றளவில் மட்டுமே பணியிட மாற்றம் செய்யப்படுவார்கள்.

பிஹார் முழுவதும் நாங்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வருகிறோம். முதல்கட்டத் தேர்தல் பிரச்சாரத்துக்கான கடைசி நாள் இது. மக்கள் மாற்றத்துக்கான மனநிலையில் இருக்கிறார்கள். இந்த முறை பிஹாரில் 20 ஆண்டுகளாக இருக்கும் ஆட்சியை மக்கள் அகற்றுவார்கள்.” என தெரிவித்தார்

## சென்னையில் 5 இடங்களில் அமலாக்கத்துறை சோதனை

சென்னை,நவ.5:

சென்னை நெற்குன்றத்தை சேர்ந்த வெங்கடேஷ் என்பவர் சவுரி முடி மற்றும் விக் ஆகியவற்றை ஏற்றுமதி செய்யும் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்.

இவரது வீட்டில் நேற்று காலையில் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனையில் ஈடுபட்டனர்.

கோயம்பேட்டில் வசித்து வரும் தொழில் அதிபர் லோகநாதன் கட்டுமான தொழிலில் ஈடுபட்டு வருகிறார்.

இவரது வீட்டிலும் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை மேற்கொண்டனர்.

சென்னை கோடம்பாக்கம் வெள்ளாளர் 2-வது தெருவில் வசித்து வரும் தொழில் அதிபர் வீடு, தெற்கு சிவன் கோவில் தெருவில் வசித்து வரும் தொழில் அதிபர் ஒருவரின் வீடு ஆகியவற்றிலும் 5-க்கும் மேற்பட்ட அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தினார்கள். சென்னையில் 5 இடங்களில் சோதனை நடத்தப்பட்டது.

சட்ட விரோத பணப் பரிமாற்றம் தொடர்பாக எழுந்த புகாரின் அடிப்படையிலேயே அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தி உள்ளனர்.

இது தொடர்பாக தொழில் அதிபர்களின் வீடுகளில் உள்ள கம்ப்யூட்டர்களை ஆய்வு செய்து அதிகாரிகள் ஆவணங்களை திரட்டி உள்ளனர்.

இதன் பேரில் விசாரணை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

# கோவை பாலியல் வன்கொடுமை: குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை

## முதல்வர் ஸ்டாலின் உறுதி



கோவை,நவ.5:

“கோவையில் இளம்பெண்ணுக்கு நிகழ்ந்த துயரம் மனிதத்தன்மையற்றது. இச்சம்பவத்தில் ஒரு மாதத்திற்குள் குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்து, குற்றச் செயலில் ஈடுபட்டவர்களுக்கு அதிகபட்ச தண்டனையை விரைந்து பெற்றுத் தர, காவல்துறையினருக்கு உத்தரவிட்டுள்ளேன்” என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கோவை விமான நிலையம் அருகே நேற்று முன்தினம் நள்ளிரவு வேளையில் கல்லூரி மாணவி ஒருவர், 3 பேர் கொண்ட கும்பலால் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டார். இந்தச் சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. இது தொடர்பாக 7 தனிப்படைகள் அமைக்கப்பட்டு போலீஸார் விசாரணை மேற்கொண்டு வந்தனர்.

இச்சம்பவத்தில் தொடர்புடைய 3 பேரை தனிப்படை போலீஸார் துப்பாக்கியால் காலில் சுட்டுப் பிடித்தனர். பிடிபட்ட 3 பேரும் கோவை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், “கோவையில் இளம்பெண்ணுக்கு நிகழ்ந்த துயரம் மனிதத்தன்மையற்றது. இத்தகைய கொடூர குற்றச் செயல்களைக் கண்டிக்க எந்தக் கடுஞ்சொல்லும் போதாது. இதில் ஈடுபட்ட குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு, உடனடியாகக் கைது செய்யப்பட்டுள்ளனர். ஒரு மாதத்திற்குள் குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்து, அவர்களுக்கு அதிகபட்ச தண்டனையை விரைந்து பெற்றுத் தர, காவல்துறையினருக்கு உத்தரவிட்டுள்ளேன்.

மேலும் நம் மகளிர் அனைத்துத் துறைகளிலும் அடையும் முன்னேற்றம்தான் இத்தகைய வக்கிர மிருகங்களின் ஆணாதிக்க மனநிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கும். முழுமையான முற்போக்குச் சமூகமாக நாம் மாறுவதற்கு வழிவகுக்கும்.” எனப் பதிவிட்டுள்ளார்.

## மனிதத்தன்மையற்றது மு.க.ஸ்டாலின் கண்டனம்

கோவை விமான நிலையத்தின் பின்புறம் கல்லூரி மாணவி ஒருவர் தனது ஆண் நண்பருடன் பேசிக்கொண்டிருந்தபோது, அடையாளம் தெரியாத 3 நபர்கள், ஆண் நண்பரை கடுமையாகத் தாக்கிவிட்டு, மாணவியை தூக்கிச் சென்று கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்த சம்பவம் சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

பாதிப்புக்குள்ளான அம்மாணவி, காவல்துறையினரால் மீட்கப்பட்டு, தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

மாணவியை பாலியல் வன்கொடுமை செய்த 3 பேரையும் தனிப்படை போலீசார் சுட்டுப் பிடித்தனர். குணா தவசி, சதீஸ், கார்த்திக் காளீஸ்வரன் ஆகிய 3 பேரையும் போலீசார் சுட்டுப்பிடித்தனர்.

இந்நிலையில், இந்த சம்பவம் தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், “கோவையில் இளம்பெண்ணுக்கு நிகழ்ந்த துயரம் மனிதத்தன்மையற்றது; இத்தகைய கொடூர குற்றச் செயல்களைக் கண்டிக்க எந்தக் கடுஞ்சொல்லும் போதாது.

இதில் ஈடுபட்ட குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு, உடனடியாகக் கைது செய்யப்பட்டுள்ளனர். ஒரு மாதத்திற்குள் குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்து, அவர்களுக்கு அதிகபட்ச தண்டனையை விரைந்து பெற்றுத் தர, காவல்துறையினருக்கு உத்தரவிட்டுள்ளேன்.

மேலும் மேலும் நம் மகளிர் அனைத்துத் துறைகளிலும் அடையும் முன்னேற்றம்தான் இத்தகைய வக்கிர மிருகங்களின் ஆணாதிக்க மனநிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கும்; முழுமையான முற்போக்குச் சமூகமாக நாம் மாறுவதற்கு வழிவகுக்கும்!” என்று தெரிவித்துள்ளார்.

## பொன்முடி, சாமிநாதன் திமுக துணைப் பொதுச் செயலாளர்களாக நியமனம்



சென்னை,நவ.5:

தி.மு.க.வில் அண்மைக்காலமாக ஓரங்கப்பட்டு வந்த முன்னாள் அமைச்சர் பொன்முடியின் அரசியல் எதிர்காலம் குறித்து கேள்விகள் எழுப்பப்பட்டு வந்த நிலையில், தி.மு.க. துணை பொதுச்செயலாளராக மீண்டும் முன்னாள் அமைச்சர் பொன்முடியை நியமித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

மேலும், அமைச்சராக உள்ள மு.பெ.சாமிநாதனும் துணை பொதுச்செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளதால் தற்போது தி.மு.க.வில் துணை பொதுச்செயலாளராக 7 பேர் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

துணைபொதுச்செயலாளராக மு.பெ.சாமிநாதன் நியமிக்கப்பட்டதால் திருப்பூர் கிழக்கு மாவட்ட பொறுப்பாளராக பத்மநாபன் நியமிக்கப்பட்டுள்ளார்.

ADVERTISING
FOR ALL TYPES OF NOTICE ADS
- Public Notice
- Legal Notice
- Tender Notice
- Society Notice
- Loss of Share
- Merger
- Acquisition
- AFR, UFR, etc.

for just Rs. 249/- only in Daily Print Paper
ஆனந்த பாஸ்கர் 9337501889, 7789941009
Email: anandabhaskarnews@gmail.com

## ஆத்தூர் அருகே பா.ம.க. எம்.எல்.ஏ. அருள் கார் மீது தாக்குதல்



சேலம்,நவ.5:

சேலம் மேற்கு தொகுதி பா.ம.க. எம்.எல்.ஏ. அருள் இன்று தனது ஆதரவாளர்களுடன் காரில் சேலம் மாவட்டம் ஆத்தூர் அருகே உள்ள பெத்தநாயக்கன்பாளையம் அருகே வடுகம்பட்டி பகுதியில் கட்சி நிர்வாகி துக்க வீட்டிற்கு சென்றார். பின்னர் அங்கிருந்து மீண்டும் சேலம் வந்து கொண்டிருந்தார்.

அப்போது அன்புமணி ஆதரவாளர்கள் அங்கு நின்று கொண்டிருந்தனர். திடீரென அவர்கள் கார்களை வழிமறித்து நிறுத்தி அருள் எம்.எல்.ஏ.வுடன் வாக்குவாதம் செய்தனர். பின்னர் திடீரென அவர்கள் அருள் எம்.எல்.ஏ. சென்ற கார் மற்றும் அவருடன் சென்ற 15-க்கும் மேற்பட்ட கார்கள் மீது கற்களை வீசி தாக்குதல் நடத்தினர். இதில் அந்த கார்களின் கண்ணாடி உடைந்து சேதமானது.

இதனால் அங்கு பதட்டமான சூழ்நிலை நிலவியது. இந்த மோதல் பற்றி தெரியவந்ததும் சம்பவ இடத்திற்கு போலீசார் விரைந்து சென்றனர். பின்னர் அவர்கள் அருள் எம்.எல்.ஏ.வை மீட்டு அனுப்பி வைத்தனர். இதையடுத்து அருள் எம்.எல்.ஏ. தாக்குதல் நடத்தியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி சேலம் மாவட்ட சூப்பிரண்டு அலுவலகத்துக்கு புகார் கொடுக்க வந்தார். அருள் எம்.எல்.ஏ. கூறும்போது, என்னை கொலை செய்யும் முயற்சியில் தாக்குதல் நடத்தினர் என்று தெரிவித்தார்.



# அனைத்து ஓய்வூதியர் சங்க மாவட்ட செயற்குழு கூட்டம்



திருவண்ணாமலை , நவ5:
தமிழ் நாடு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அனைத்து ஓய்வூதியர் சங்க மாவட்ட செயற்குழு கூட்டம் 4.11.2025 முற்பகல் 10.30 மணியளவில் திருவண்ணாமலை கிராம நிர்வாக அலுவலர் சங்க கட்டடத்தில் மாவட்ட தலைவர் தோழர் மணிவண்ணன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் தோழர் இனியன் கடந்த கால வேலை அறிக்கையும் 9.12.2025 திருவண்ணாமலையில் நடைபெற இருக்கும் மாநில செயற்குழு கூட்ட திட்டமிடல் குறித்தும் உரையாற்றினார். இறுதியாக மாநில செயலாளர் தோழர் சி. சுப்ரமணியன் அவர்கள் மாவட்ட, மாநில நிலமைகள் குறித்து விரிவாக விளக்கி பேசினார். இறுதியாக தோழர் உதயகுமார் அவர்கள் நன்றி கூறினார்.

# விஜய் கொடுத்த ரூ. 20 லட்சத்தை வீணாக்கும் மருமகன்



## கதறி அழுத மாமியார்

சென்னை, நவ.5:
கரூரில் கடந்த மாதம் 27-ந் தேதி தமிழக வெற்றிக்கழக தலைவர் விஜய் பங்கேற்ற பிரசார கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர்.

நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்திய இந்தச் சம்பவத்தில், பலியானவர்களின் குடும்பத்தினருக்கு ரூ.20 லட்சம் நிவாரண உதவி வழங்கப்படும் என்றும், காயம் அடைந்தவர்களுக்கு ரூ.2 லட்சம் வழங்கப்படும் என்றும் விஜய் அறிவித்தார். அதன்படி உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு ரூ.20 லட்சம் சம்பந்தப்பட்டவர்களின் வங்கி கணக்கிற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இந்நிலையில், விஜய் கொடுத்த ரூ. 20 லட்சத்தை தனது மருமகன் வீணாக்கி வருவதாக மாமியார் புகார் அளித்துள்ளார்.

இதுகுறித்து பேசிய அவர், "3 ஆண்டுகளுக்கு முன்பு எனது மக்களுக்கு திருமணம் நடைபெற்றது. அவளுக்கு இரண்டரை வயதில் ஒரு பெண் குழந்தை உள்ளது. திருமணமான ஒரு வருடத்திலேயே எனது மகள் கணவனுடன் வாழாமல் என வீட்டிற்கு வந்துவிட்டாள். இப்போது விஜய் கூட்டத்தில் என் மகள் உயிரிழந்தார். அப்போது கூட என் மகளின் சடலத்தை பார்க்க வராத என் மருமகன், இழப்பீடு பணம் அறிவித்தவுடன் மருத்துவமனையில் வந்து சண்டையிட்டு சடலத்தை வாங்கி அடக்கம் செய்ததோடு மகளையும் தன்னோடு அழைத்து சென்றார்.

இப்போது ரூ.20 லட்சம் பணம் வாங்கியவுடன் வேறு மாதிரி நடந்து கொள்கிரார். ஆகையால் என் மகளின் இறப்பிற்கு கிடைத்த இழப்பீட்டு பணத்தை என் மகளின் பெயரில் வங்கியில் டெபாசிட் செய்யவேண்டும். அதற்கு அவரையும் என்னையும் நாமினியாக நியமிக்க வேண்டும். அப்போது தான் என் பேத்தியின் எதிர்காலம் பாதுகாக்கப்படும். அனால் அந்த பணத்தை என் விருப்பப்படி தான் செலவு செய்வேன் என்று எகத்தாளமாக பேசுகிறார்" என்று அழுதபடியே தெரிவித்தார்.

# கோவை பாலியல் வன்கொடுமை 3 பேரை சுட்டுப்பிடித்த இடத்தில் தடயவியல் நிபுணர் குழு சோதனை



கோவை, நவ.5:
கோவை விமான நிலையத்தின் பின்புறம் கல்லூரி மாணவி ஒருவர் தனது ஆண் நண்பருடன் பேசிக்கொண்டிருந்தபோது, அடையாளம் தெரியாத 3 நபர்கள், ஆண் நண்பரை கடுமையாகத் தாக்கிவிட்டு, மாணவியை தூக்கிச் சென்று கூட்டுப்பாலியல் வன்கொடுமை செய்த சம்பவம் சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

பாதிப்புக்குள்ளான அம்மாணவி, காவல்துறையினரால் மீட்கப்பட்டு, தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த சம்பவம் குறித்து பீளமேடு போலீசார் வழக்குப்பதிவு செய்து 3 பேர் கும்பலை தேடிவந்தனர். மேலும் சம்பவம் நடந்த பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமராவில் பதிவான காட்சிகளை வைத்து தனிப்படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

மாணவியை பாலியல் வன்கொடுமை செய்த 3 பேரையும் தனிப்படை போலீசார் சுட்டுப் பிடித்தனர். குணா தவசி, சதீஸ், கார்த்திக் காளீஸ்வரன் ஆகிய 3 பேரையும் போலீசார் சுட்டுப்பிடித்தனர்.

துடியலூர் அருகே போலீசாரை தாக்கி விட்டு தப்பியோட முயன்றபோது 3 பேரையும் காலில் சுட்டுப்பிடித்ததாக போலீசார் தெரிவித்துள்ளனர். அவர்கள் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் கோவை துடியலூரில் 3 பேர் சுட்டுப் பிடிக்கப்பட்ட இடத்தில் தடயவியல் துறையினர் ஆய்வு மேற்கொண்டனர். துப்பாக்கிச்சூடு நடைபெற்ற கோவை துடியலூர் அடுத்த வெள்ளக்கிணறு அருகே தடயவியல் நிபுணர் குழு சோதனை நடத்தி வருகின்றனர்.

# திமுகவில் இணைந்தார் ஓபிஎஸ் ஆதரவாளர் மனோஜ் பாண்டியன்



## அதிமுக மீது சரமாரி குற்றச்சாட்டு

சென்னை, நவ.5:
நெல்லை மாவட்டம், ஆலங்குளம் தொகுதி எம்எல்ஏவும், ஓ.பன்னீர்செல்வம் ஆதரவாளருமான மனோஜ் பாண்டியன் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் திமுகவில் இணைந்தார்.

தென்காசி மாவட்டம் ஆலங்குளம் தொகுதியில் எம்எல்ஏ ஆக இருப்பவர் மனோஜ் பாண்டியன். அதிமுக வேட்பாளராக போட்டியிட்டு வெற்றிபெற்ற இவர், ஓ.பன்னீர் செல்வத்தின் ஆதரவாளராக அறியப்படுகிறார்.

இந்நிலையில், நெல்லை மாவட்டம், ஆலங்குளம் தொகுதி எம்எல்ஏவும், ஓ.பன்னீர்செல்வம் ஆதரவாளருமான மனோஜ் பாண்டியன் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் திமுகவில் இணைந்தார். முன்னாள் சபாநாயகரும், அதிமுக மூத்த தலைவருமான மறைந்த பி.ஹெச் பாண்டியனின் மகன் மனோஜ் பாண்டியன் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், அவர் செய்தியாளர்களிடத்தில் பேசும்போது, "திராவிட கொள்கைகளை பின்பற்றும் இயக்கமான திமுகவில் இணைந்துள்ளேன்; தமிழக உரிமைகளை அடகு வைக்காத தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

தொண்டர்களின் உழைப்பை அங்கீகரிக்காதவர் எடப்பாடி பழனிசாமி. பாஜகவுடன் எந்தவொரு காலத்திலும் கூட்டணி வைக்க மாட்டேன் என்று கூறிவிட்டு தற்போது எந்த அடிப்படையில் கூட்டணி வைத்தார் என்று தெரியவில்லை.

இது குறித்து இன்று வரை பதில் இல்லை. எந்த கொள்கைக்காக இந்த இயக்கம் உருவாக்கப்பட்டதோ, அது காற்றில் விடப்பட்டுள்ளது.


# 10 மற்றும் 12-ம் வகுப்பு பொதுத்தேர்வு அட்டவணையை வெளியிட்டார் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர்



சென்னை, நவ.5:
நடப்பு கல்வியாண்டில் 10, 12-ம் வகுப்பு பொதுத்தேர்வு அட்டவணையை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யமொழி இன்று வெளியிட்டார். அதன்படி,

* பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு மார்ச் 11-ம் தேதி தொடங்கி ஏப்ரல் 6-ந்தேதி வரை நடைபெறும்.
* 8.70 லட்சம் மாணவர்கள் 10-ம் வகுப்பு பொதுத்தேர்வை எழுத உள்ளனர்.
* பன்னிரண்டாம் வகுப்பு பொதுத்தேர்வு மார்ச் 2-ந்தேதி தொடங்கி மார்ச் 26-ந்தேதி வரை நடைபெறுகிறது.
* பன்னிரண்டாம் வகுப்பு பொதுத்தேர்வு 8.7 லட்சம் மாணவர்கள் எழுத உள்ளனர்.
* 11-ம் வகுப்பு அரியர் தேர்வு மார்ச் 3-ந்தேதி தொடங்கி மார்ச் 27-ந்தேதி நடைபெறும்.
* 12-ம் வகுப்பு மாணவர்களுக்கான தேர்வு முடிவுகள் மே மாதம் 8-ந்தேதி வெளியிடப்படும்.
* 10-ம் வகுப்பு மாணவர்களுக்கான தேர்வு முடிவுகள் மே மாதம் 20-ந்தேதி வெளியிடப்படும்.

# சேலத்தில் 2 மூதாட்டிகள் கொலை கல்குவாரி குட்டையில் பிணமாக மீட்பு



சேலம், நவ.5:
சேலம் இளம்பிள்ளை அருகேயுள்ள இடங்கணசாலை நகராட்சிக்குட்பட்ட தூதனூர் பகுதியைச் சேர்ந்தவர் பாவாயி (70) விவசாய கூலி தொழிலாளி. அதே பகுதியைச் சேர்ந்தவர் பெரியம்மாள் (75) ஆடுகளை வளர்த்து வாழ்ந்து வந்தார். இவர்கள் 2 பேரும் நேற்று காலை 9 மணியளவில் வீட்டை விட்டு வெளியே சென்றனர். பின்னர் அவர்கள் இரவு வரை வீடு திரும்பவில்லை. இதையடுத்து 2 பேரின் உறவினர்களும் பல்வேறு இடங்களில் தேடிப்பார்த்தனர். ஆனால் அவர்கள் காணவில்லை. இதுகுறித்து மகுடஞ்சாவடி போலீஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டது.

இந்த நிலையில் தூதனூர் பகுதியில் அம்மாசி என்பவருக்கு சொந்தமான கல்குவாரியில் உள்ள தண்ணீர் குட்டையில் காணாமல் போன மூதாட்டிகள் பாவாயி, பெரியம்மாள் ஆகியோர் பிணமாக கிடப்பதாக மகுடஞ்சாவடி போலீசாருக்கு தகவல் கொடுத்தனர்.

இதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற மகுடஞ்சாவடி போலீசார் தீயணைப்பு துறை வீரர்கள் உதவியோடு 2 பேரின் உடல்களையும் மீட்டு பிரேத பரிசோதனைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் மூதாட்டிகள் அணிந்திருந்த நகைகள் காணாமல் போனதால் நகைக்காக 2 மூதாட்டிகளையும் மர்ம நபர்கள் கொலை செய்து கல்குவாரி தண்ணீரில் வீசி சென்றார்களா? என்ற கோணத்தில் போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இந்த சம்பவம் சேலத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## பொன்முடிக்கு மீண்டும் கட்சிப்பதவி

# கோவை மாணவி வன்கொடுமை சமயத்தில் Award என அதிமுக விமர்சனம்

கோவை, நவ.5:
அதிமுக சார்பில் எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:-

கோவை கல்லூரி மாணவி பாலியல் வன்கொடுமை நாட்டையே உலுக்கியுள்ள இந்த சமயத்தில், பெண்களை மிகவும் கொச்சையாக, ஆபாசமாக, பேசிய பொன்முடிக்கு மீண்டும் துணைப் பொதுச்செயலாளர் பதவியை Award-ஆக வழங்கி, அழகு பார்த்துள்ளது அறிவாலயம்.

ஆபாசமாக, அவதூறாக, இன ரீதியாக இழிவுபடுத்தி பேசினால் பெயருக்கு ஒரு நீக்கம் என கண்துடைப்பு நாடகம் நடத்திவிட்டு, சில மாதங்கள் சேர்த்து மீண்டும் அதே பதவி வழங்கப்படுவதே திமுக-வின் பார்முலா!

பள்ளி, கல்லூரி, ஏர்போர்ட் வரை எந்த பக்கமும் பெண்கள் பாதுகாப்பாக இருக்க முடியாத மிக மோசமான நிலைக்கு தமிழ்நாட்டின் ஆட்சியைத் தள்ளிய கட்சியான திமுக, இந்த நியமனத்தின் மூலம் தமிழ்நாட்டு பெண்களுக்கு சொல்லவரும் செய்தி ஒன்றுதான்:

திமுக எனும் கட்சி பெண்களுக்கு எதிரானது; பெண்களுக்கு எதிரான ஆபாசத்தை Enable செய்வது; பெண்கள் பாதுகாப்பு பற்றி திமுக-விற்கு துளியும் கவலையில்லை. இவ்வாறு அதிமுக தெரிவித்துள்ளார்.

# வட மாநிலத்தவருக்கு வாக்குரிமை வழங்கவே தமிழ்நாட்டில் S.I.R. நடவடிக்கை - சீமான் குற்றச்சாட்டு-



திருச்சி, நவ.5:
நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் திருச்சி விமான நிலையத்தில் நிருபர்களிடம் கூறியதாவது:-

கோவையில் நடந்த பெண்களுக்கு எதிரான பாலியல் நிகழ்வு போல பல நிகழ்வுகள் வெளியே தெரியாமல் இருக்கிறது. தமிழகத்தில் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டிருக்கிறது.

எங்கு பார்த்தாலும் போதை கலாச்சாரமாக மாறி உள்ளது. மேலும் சம்பவம் நடைபெற்ற பகுதியில் நீண்ட நாட்களாக அதிகமாக மது விற்பனை நடைபெற்று உள்ளது. காவல்துறை சுட்டு பிடித்தோம் என்கிறார்கள். இதற்கு நாம் தலைகுனிய வேண்டியதாக உள்ளது.

ஒரு பாதுகாப்பற்ற சூழலில் நாம்வாழ்ந்துகொண்டிருக்கிறமோ என்ற நடுக்கம் ஏற்படுகிறது. கடும் சட்டங்கள் இருந்தால் தான் இது போன்ற சம்பவங்களை தடுத்து நிறுத்த முடியும். பொள்ளாச்சியில் இதே போன்ற ஒரு சம்பவம் நடைபெற்றுள்ளது. அண்ணா பல்கலைக் கழகத்தில் நடந்துள்ளது.

துரோகத்தைப் பற்றி, சமூக நீதி, சுயமரியாதை பற்றி பேசுவதற்கு அ.தி.மு.க.வுக்கு தகுதி இல்லை. ஆரியத்தை எதிர்க்க வந்தது திராவிடம் என்கிறார்கள். தமிழன் என்று வந்தால் பார்ப்பனர்கள் நானும் தமிழன் என்று உள்ளே வந்து விடுவார் என்று வீரமணி போன்றவர்கள் பேசுகிறார்கள்.

அதே கருத்தை தான் அ.தி.மு.க.வினரும் பேசுகிறார்கள். அப்படி இருக்கும் போது ஜெயலலிதா தலைமையை இவர்கள் எப்படி ஏற்றார்கள்.

வாக்காளர் பட்டியல் திருத்தம் விவகாரத்தில் பா.ஜ.க. தேவையற்ற வேலையை செய்கிறது. மக்களை எப்போதும் பதற்றத்தோடு வைத்து பார்க்கிறார்கள். அப்போதான் செய்கிற தவறு வெளியே தெரியாமல் இருக்கும்.

ஆவணங்கள் கொடுக்க வில்லை என்றால் பெயரை நீக்குவோம் என தேர்தல் ஆணையம் இப்போது தெரிவிக்கிறது. 2 மாதத்தில் தேர்தலை வைத்துக் கொண்டு என்ன ஆவணங்களை கொடுக்க முடியும். பீகார் போன்ற வட மாநிலங்களில் இருந்து தமிழ்நாட்டு வந்தவர்களுக்கு வாக்குரிமை வழங்க இந்த வேலையை செய்கிறார்கள்.

அப்படி வழங்கும் போது தமிழ்நாடு மற்றும் ஒரு பீகாராக மாறிவிடும். கரூர் கூட்ட நெரிசல் தொடர்பாக நான் சொன்ன அதே கருத்தை தான் நடிகர் அஜித்தும் தெரிவித்து உள்ளார். இந்த முறையே தவறு, இது போன்ற கலாச்சாரமே தவறு என்று தான் அஜித் கூறுகிறார்.

அனைத்து அரசியல் கட்சித் தலைவருக்கும் பொதுவான இடத்தை ஒதுக்கி ஒவ்வொருவரும் அங்கு வந்து பேசிவிட்டு செல்லட்டும். மக்கள் அதை பார்த்து ஓட்டு போடட்டும். இதைத்தான் அவரும் சொல்கிறார்.

மற்ற நாடுகளில் இங்கு செய்வது போன்ற பிரசாரம் போன்ற நிலை இல்லை.

வருகின்ற தேர்தலில் இங்கு கட்சிகளுக்கு போட்டி அல்ல கருத்துகளுக்கு தான் போட்டி. நான் அரசியலுக்கு வந்து 10 வருடங்கள் ஆகிறது. நான் ஜெயிப்பேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

பேட்டியின்போது திருச்சி மாவட்ட ஒருங் கிணைப்பாளர் ஜல்லிக்கட்டு ராஜேஷ் உடன் இருந்தார்.

# தன்மானத்தை அடகு வைத்து விட்டு திமுக-வில் இணைந்தார்

## மனோஜ் பாண்டியனுக்கு வைகைச்செல்வன் பதிலடி



சென்னை, நவ.5:
2021 தமிழக சட்டசபை தேர்தலில் அதிமுக சார்பில் ஆலங்குளம் தொகுதியில் போட்டியிட்டு எம்.எல்.ஏ. ஆனவர் மனோஜ் பாண்டியன். எடப்பாடி பழனிசாமி- ஓ. பன்னீர் செல்வம் இடையே மோதல் ஏற்பட்டபோது ஓ. பன்னீர் செல்வத்துக்கு ஆதரவாக செயல்பட்டார்.

திமுக-வில் இணைந்தது குறித்து மனோஜ் பாண்டியன் கூறியதாவது:-

தி.மு.க. தலைவர், முதல்-அமைச்சர் மு.க. ஸ்டாலினை சந்தித்து தி.மு.க.வில் இணைத்து கொண்ட போது என்னை அவர் முழு மன தோடு வரவேற்றார். நான் இன்று மாலை எனது எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்கிறேன்.

தமிழ்நாட்டு உரிமைகளை அடகு வைக்காமல் தமிழகத்தின் நலனுக்காக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் எடுத்து வரும் முயற்சிகளை யும், அதனால் ஏற்படும் சோதனைகளையும் எதிர் கொண்டு தமிழக உரிமை களை அடகு வைக்காத தலைவர் மு.க.ஸ்டாலின்.

எந்த கொள்கைக்காக அ.தி.மு.க.வை எம்.ஜி.ஆர். உருவாக்கினாரோ அதே கொள்கையில் ஜெயலலிதாவும் பயணித்து வந்தார். ஆனால் இன்றைக்கு அ.தி.மு.க.வை வழி நடத்தும் எடப்பாடி பழனிசாமி தொண்டர்களின் உணர்வு களை மதிக்காத தலைவராக உள்ளார். பா.ஜனதா கட்சியுடன் எந்த சூழ்நிலையிலும் கூட்டணி வைக்க மாட்டேன் என்று சொன்னவர் பிறகு மீண்டும் எந்த அடிப்படையில் கூட்டணி வைத்தார் என்று தெரியவில்லை.

இதுபற்றி தொண்டர்கள் யாரிடமும் கருத்து கேட்கவில்லை. பா.ஜனதா கட்சியின் கிளை கழகம் போல் அ.தி.மு.க. செயல்படுகிறது.அ.தி.மு.க.வை அடகு வைத்து விட்டு செயல்படும் நிலை இன்று ஏற்பட்டுள்ளதால் அதில் இருந்து விலகி தி.மு.க.வில் தொண்டனாக பணியாற்ற வந்துள்ளேன்.

திராவிட கொள்கைகளை பின்பற்றும் இயக்கமாக தி.மு.க. விளங்குகிறது. வலிமையான தமிழகத்தை உருவாக்க கூடிய தலைவராக முதல்-அமைச்சர் மு.க. ஸ்டாலின் செயல்படுகிறார்.

அ.தி.மு.க.வை தோற்றுவித்த தலைவரும், அம்மாவும் எந்த சூழ்நிலையிலும் கட்சியை அடகு வைக்கவில்லை. ஆனால் இன்றைய அ.தி.மு.க. வேறு ஒரு இயக்கத்தை நம்பி உள்ளது. எனவே நான் எஞ்சிய வாழ்க்கையை தி.மு.க.வில் பயணிக்க முடிவு செய்து உள்ளேன். இது நான் எடுத்த தீர்க்கமான முடிவு.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்த நிலையில் மனோஜ் பாண்டியன் திமுக-வில் இணைந்தது குறித்து வைகைச்செல்வன் கூறியதாவது:-

தன்மானத்தை அடகு வைத்துவிட்டு திமுக-வில் மனோஜ் பாண்டியன் இணைந்துவிட்டார். திமுக-வில் இணைவதற்கு முன்பாகவே மனோஜ் பாண்டியன் எம.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்திருக்கலாம்.

இவ்வாறு வைகைச் செல்வன் தெரிவித்தார்.

# ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து 6,500 கனஅடியாக நீடிப்பு



**ஒகேனக்கல், நவ.5:** கர்நாடகா காவிரி கரையோரங்களில் பெய்த மழையின் காரணமாக ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து குறைவதும் அதிகரிப்பதுமாக இருந்து வருகிறது.

இந்த நிலையில் தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து நேற்று 6,500 கனஅடியாக வந்தது. இன்றும் அதே அளவு தண்ணீர் நீடித்து வந்தது.

இதனால் மெயின் அருவி, சினிபால்ஸ், ஐந்தருவி உள்ளிட்ட அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது.

இதனால் சுற்றுலா பயணிகள் பரிசல் பயணம் செய்து காவிரி ஆற்றின் அழகை ரசித்தனர்.

மேலும் அவர்கள் தொங்கு பாலத்தில் நின்று காவிரி ஆற்றில் பாறைகளுக்கு நடுவே விழும் தண்ணீரை ஆர்வமுடன் ரசித்து மகிழ்ந்தனர். பின்னர் மெயின் அருவியில் குளித்தும், பெண்கள் ஆற்றில் குளித்தும் மகிழ்ந்தனர். சுற்றுலா பயணிகள் மீன் சாப்பாடு வாங்கி கொண்டு பூங்காவில் அமர்ந்து சாப்பிட்டு மகிழ்ந்தனர்.

நீர்வரத்தை தமிழக-கர்நாடக எல்லையான பிலிகுண்டுலுவில் மத்திய நீர்வளத்துறை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

# பாதிக்கப்பட்ட பெண்ணை விமர்சிக்காதீர்! - கோவையில் பல வீடுகளில் சிசிடிவி வேலை செய்யவில்லை!

## மாநகர காவல் ஆணையர்



**கோவை, நவ.5:** கோவை ஏர்போர்ட் அருகே மாணவி கூட்டுப் பாலியல் வன்கொடுமை குற்றவாளிகள் சுட்டுப்பிடிக்கப்பட்டது குறித்து காவல் ஆணையர் சரவண சுந்தர் விளக்கம் அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

* கோவையில் 300 சிசிடிவி கேமராக்களை ஆய்வு செய்து குற்றவாளிகள் 3 பேரையும் கைது செய்துள்ளோம்.

* கோவையில் பல இடங்களில் வீடுகளில் உள்ள சிசிடிவி கேமராக்கள் வேலை செய்யவில்லை. பொதுமக்களும் அதனை கவனிக்க வேண்டும்.

*பாதிக்கப்பட்ட இளம்பெண் நல்ல உடல்நலத்துடன் உள்ளார்.

* பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு உளவியல் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

*பாதிக்கப்பட்ட பெண்ணை விமர்சிக்காதீர். எங்கும் எந்த நேரத்திலும் செல்ல அனைவருக்கும் உரிமை உண்டு.

* தனிமனித உரிமைக்கு முக்கியத்துவம் அளித்து பாதிக்கப்பட்டவர்களை விமர்சிக்கக்கூடாது.

இவ்வாறு அவர் கூறினார்.

## இரட்டை இலை சின்னம் விவகாரம்

# தேர்தல் ஆணையத்திற்கு செங்கோட்டையன் கடிதம்




**ராமநாதபுரம், நவ.5:** ராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன்னில் நடந்த தேவர் ஜெயந்தி விழாவில் சசிகலா, ஓ.பன்னீர்செல்வம், டி.டி.வி.தினகரனை அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் சந்தித்து பேசினார். இது தமிழக அரசியல் களத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இதைத்தொடர்ந்து அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, செங்கோட்டையனைகட்சியில் இருந்து நீக்கினார். கட்சி விதிகளுக்கு எதிராக செயல்பட்டதால் செங்கோட்டையன் நீக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் இரட்டை இலை சின்னம் தொடர்பாக இந்திய தேர்தல் ஆணையத்துக்கு செங்கோட்டையன் கடிதம் எழுதியுள்ளார்.

அவர் எழுதி உள்ள கடிதத்தில், இரட்டை இலை சின்னம் யாருக்கு என்பது குறித்த விரைந்து விசாரிக்க வேண்டும். எடப்பாடி பழனிசாமியிடம் இருப்பது உண்மையான அ.தி.மு.க. இல்லை. அ.தி.மு.க.வின் உண்மை நிலை என்ன என்பதை நிரூபிக்க அவகாசம் தேவை என்று அவர் தெரிவித்துள்ளார்.




# ஆலோசனை கூட்டம்





இராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு சட்டப்பேரவைத் தொகுதியைச் சேர்ந்த கழக நிர்வாகிகளுடன் ஆலோசனை கூட்டம் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆலோசனை கூட்டத்தை நடத்தினார்.இதில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஆர். காந்தி, அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர்.எஸ். ஜெகத்ரட்சகன், ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல். ஈஸ்வரப்பன், கழக சுற்றுச்சூழல் அணி மாநில துணை செயலாளர் ஆர்.வினோத்காந்தி மற்றும் மாநில இளைஞர் அணி துணை அமைப்பாளர் பிரபு கஜேந்திரன் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மற்றும் கழகத்தினர் உடனிருந்தனர்.


# இளையான்குடியில் திமுக பாகமுகவர்கள் கூட்டம்



**சிவகங்கை, நவ.5:** சிவகங்கை மாவட்டம் இளையான்குடி வடக்கு ஒன்றிய பேரூர் திமுக பாகமுகவர்கள் ஆலோசனைக கூட்டம் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் முன்னாள் அமைச்சர் ஆ தமிழரசி ரவிக்குமார் தலைமையில் இளையான்குடி வடக்கு ஒன்றிய செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சுப.மதியரசன் பேரூர் செயலாளர் நஜீமுதீன் முன்னிலையில் மானாமதுரை தொகுதி பார்வையாளர் கேஆர்என். போஸ் சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் பா.காளிமுத்து, கண்ணமங்கலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க முன்னாள் தலைவர் சுப. தமிழரசன், பேரூராட்சி துணைத் தலைவர் டி கே இப்ராஹிம், மாவட்ட பிரதிநிதி சாரதி என்ற சாருஹாசன், மானாமதுரை தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் கி.கண்ணன், வார்பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் பைரோஸ் கான், இபுராஹீம் ஷா ,ஜெயினுலாபுதீன், கம்பன் காதர்,காதர் சுல்தான், ஒன்றிய துணை செயலாளர்கள் சிவனேசன், இராஜேந்திரன், உள்ளிட்ட நிர்வாகிகள் பாகமுகவர்கள் கலந்து கொண்டனர்.

# ராஜராஜ சோழத் தேவரின் 1078-வது சதய விழா



**தஞ்சாவூர்மா, நவ.5:** மன்னர் ராஜராஜ சோழத் தேவரின் 1078வது சதய விழா தஞ்சை பெருவுடையார் திருக்கோவிலில் நேற்று மிகுந்த சிறப்புடன் நடைபெற்றது. விழாவில் பாண்டியர்கள் தேடிப் பயணம் வரலாற்று ஆய்வு குழு சார்பாக மன்னருக்கு மரியாதை செலுத்தும் வகையில் சிறப்பு பூஜை மற்றும் சீர்வரிசை நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது.

பண்டைய தமிழர் மரபுப்படி மன்னரின் பிறந்த நாளில் மக்கள் பரிசுப் பொருட்கள் மற்றும் சீர்வரிசை அளிப்பது வழக்கம். அந்த பாரம்பரியத்தை மீண்டும் உயிர்ப்பிக்கும் வகையில், ஆய்வு குழுவினர் மன்னர் திருவுருவச்சிலைக்கு சீர்வரிசை அளித்து மரியாதை செலுத்தினர்.

கைலாய வாத்தியம் முழங்க, சீர்வரிசை தட்டோடு மன்னரை காண பெருந்திரளான பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் திரண்டனர். கோவில் வளாகம் திருவிழா சூழ்நிலையை ஒத்திருந்தது.


பூஜை முடிந்த பின், இராஜஸ்ரீ சி. பாபாஜி ராஜா போன்ஸ்லே, அரண்மனை தேவஸ்தானம் பரம்பரை அறங்காவலர், அவர்களுக்கு பாண்டியர்கள் தேடிப் பயணம் வரலாற்று ஆய்வு குழு சார்பாக மரியாதை வழங்கப்பட்டது.

அதே நேரத்தில், தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானம் சார்பாகவும் பாண்டியர்கள் தேடிப் பயணம் வரலாற்று ஆய்வு குழு நிர்வாகிகளுக்கு மரியாதை அளிக்கப்பட்டது. நிகழ்வை சிறப்பாக ஒருங்கிணைத்த பாண்டியர்கள் தேடிப் பயணம் வரலாற்று ஆய்வு குழு தலைமை ஆய்வாளர் மணிகண்டன் அவர்களுடன், குழுவினர் பலரும் கலந்து கொண்டு மாமன்னருக்கு மரியாதை செலுத்தினர்.இந்த விழா, சோழர் பாண்டியர் வரலாற்று ஒற்றுமையை வெளிப்படுத்திய வரலாற்று சிறப்புமிக்க நாளாக அமைந்தது.

# திருவண்ணாமலை வட்ட செயற்குழு கூட்டம்



தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கத்தின் திருவண்ணாமலை வட்ட செயற்குழு கூட்டம் 3.11.2025 அன்று காலை 11மணியளவில் கிராம நிருவாக அலுவலர் சங்க கட்டிடத்தில் தலைவர் ஆர். கண்ணன் தலைமையில் நடைபெற்றது.



# தினம் ஒரு குறள்

**நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்**
**மலையினும் மாணப் பெரிது.** - குறள் 124

ఊన్న ధర్మమునకు భిన్నత గానట్టి
నిగ్రహ పరుఁజూడ వింగి వంగు -కురల్ 124

**बिना टले निज धर्म से, जो हो संयमशील ।**
**पर्वत से भी उच्चतर, होगा उसका डील ॥** - कुराल 124

Nilaiyin Thiriyaadhu Atangiyaan Thotram
Malaiyinum Maanap Peridhu - Kural 124

# ஒரே இடத்தில் தொடர்ந்து விபத்தா? ஒப்பந்ததாரருக்கு இனி அபராதம்

## நெடுஞ்சாலைத்துறை ‘கிடுக்கிப்பிடி’



**சென்னை, நவ.5:** இந்தியாவில் கடந்த மார்ச் மாதம் வரையிலான நிலவரப்படி 63 லட்சம் கிலோ மீட்டர் நீளத்துக்கு சாலை வசதி இருக்கிறது. இதில், 1 லட்சத்து 46 ஆயிரத்து 204 கிலோ மீட்டர் தேசிய நெடுஞ்சாலை, 1 லட்சத்து 79 ஆயிரத்து 535 கிலோ மீட்டர் மாநில நெடுஞ்சாலை மற்றும் 60 லட்சத்து 19 ஆயிரத்து 723 கிலோ மீட்டர் இதர சாலைகள் ஆகும். மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தின் கீழ் உள்ள தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் கட்டுப்பாட்டில் தேசிய நெடுஞ்சாலைகள் வருகின்றன.

தேசிய நெடுஞ்சாலைகள் தனியார் பங்களிப்புடன் மேம்படுத்தப்படுகிறது. இதற்கான கட்டணத்தை தனியார் சுங்க கட்டணம் அமைத்து வாகன ஓட்டிகளிடம் வசூலித்துக்கொள்கிறார்கள். சுங்க கட்டணம் வசூலித்துக்கொள்கிறார்களே தவிர, நெடுஞ்சாலைகளை முறையாக பராமரிப்பதில்லை என்ற குற்றச்சாட்டு வாகன ஓட்டிகளிடம் இருந்து வருகிறது. மோசமான சாலைகளால் விபத்து ஏற்படுவதும் தவிர்க்க முடியாததாகி விடுகிறது.

நாடு முழுவதும் தேசிய நெடுஞ்சாலையில் சுமார் 3 ஆயிரத்து 500 இடங்கள் விபத்து ஏற்படுவதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இதுபோன்ற இடர்களை தவிர்க்க தனியாருக்கு ஒப்பந்தம் வழங்கும் விதிகளில் மாற்றம் கொண்டுவர சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை முடிவெடுத்துள்ளது. அதாவது தேசிய நெடுஞ்சாலையில் குறிப்பிட்ட 500 மீட்டர் தொலைவில் 2-வது தடவையாக விபத்து நடந்தால் சம்பந்தப்பட்ட காண்டிராக்டருக்கு ரூ.25 லட்சம் அபராதம் விதிக்கப்பட உள்ளது.

விபத்து நடந்த மறு ஆண்டு மீண்டும் விபத்து பதிவானால் காண்டிராக்டருக்கு ரூ.50 லட்சம் அபராதம் விதிக்கப்படும். தேசிய நெடுஞ்சாலையில் ஒப்பந்த பணிகளை எடுத்த காண்டிராக்டர்கள் மாதத்துக்கு ஒரு முறை கட்டுமான பணிகளின் நிலை குறித்து டிரோன்கள் மூலம் எடுத்த படங்கள் மற்றும் வீடியோக்களை பதிவேற்றம் செய்யவேண்டும் என்று சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணி தொடங்கியது



**சென்னை, நவ.5:** இந்தியாவில் சுமார் 21 ஆண்டுகளுக்கு பிறகு முதல்கட்டமாக பீகாரில் கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணி நடத்தப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, இந்த பணி 2-ம் கட்டமாக அடுத்த ஆண்டு சட்டசபை தேர்தல் நடைபெறும் தமிழகம், கேரளா, புதுச்சேரி, மேற்குவங்காளம் உள்ளிட்ட 12 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணி நடைபெறும் என்று தேர்தல் கமிஷன் அறிவித்து இருந்தது.

தமிழ்நாட்டில் அடுத்த ஆண்டு (2026) ஏப்ரல் மாதம் சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது.

இந்த தேர்தலுக்காக 234 சட்டமன்ற தொகுதிகளிலும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் இன்று முதல் வீடு வீடாக தொடங்கி உள்ளது.

முதல் கட்டமாக, இன்று 4-ந் தேதி முதல் அடுத்த மாதம் (டிசம்பர்) 4-ந் தேதி வரை கணக்கெடுப்பு படிவம் கொடுப்பார்கள்.

2-ம் கட்டமாக 9-ந் தேதி வரைவு பட்டியல் வெளியிடப்படும். 3-ம் கட்டமாக ஆட்சேபனைகள், கோரிக்கைகள் 9-ந்தேதி முதல் ஜனவரி 8-ந் தேதி வரை பெறப்படும். 4-ம் கட்டமாக பெறப்பட்ட கோரிக்கைகள், ஆட்சேபனைகள் ஆகியவை மீது விசாரணை செய்யப்பட்டு இறுதி வாக்காளர் பட்டியல் பிப்ரவரி மாதம் 7-ந் தேதி வெளியிடப்படும்.

# கவிதை அரங்கம்!





மழையின் முதல் துளியை
வெறுப்பதும் கடைசி
துளிக்கு
வணக்கம் வைப்பதும்
மழைக் காலமா
வெயில் காலமா என்ற
சூழ்நிலையை
பொறுத்தது

யார் அருகில் இருக்கும்
போது மகிழ்ச்சியை
உணர்கிறோமோ
அவர்களோடு தான்
மகிழ்சியாக வாழ முடியும்

வாழ்நாளெல்லாம்
அடிமையாக
தொட்டிக்குள்
வாழ்வதைவிட
பிடிபட்ட அன்றே சட்டியில்
குழம்பாக கொதிப்பது
மேல்

மரத்தின் இலைகள்
உதிர்வது போல காலம்
மாறும் போது சில
கவலைகளும் தானாகவே
உதிர்ந்து விடும்

வானைப் போன்ற பெரிய
இன்பங்கள் தேவையில்லை
விண்மீன் போன்ற குட்டி
குட்டி இன்பங்கள் போதும்
வாழ்க்கையை அழகாய்
வாழ

வாழ்க்கை என்பது எல்லாம்
அழகாய் ஆடம்பரமாய்
அமைவதில் இல்லை
அமைந்ததை
அழகாய் மாற்றுவதே

## தனிமை என்பது சாபம் அல்ல...



தனிமை என்பது சாபம் அல்ல...
அது உங்களின் வலிமை.
சில நேரங்களில், நீங்கள் தனியாக உணரப்படலாம் —
ஏனெனில், உங்கள் குடும்பத்தின், உங்கள் அன்பானவர்களின் சுமையை
நீங்களே தாங்கிக்கொண்டு செல்கிறீர்கள்.
அது பலவீனம் அல்ல...
அது தியாகம்.
அது உங்களின் மன வலிமையின் வெளிப்பாடு.
உங்கள் அமைதிக்குள் ஒரு மலை போன்ற சக்தி உள்ளது,
உங்கள் சிரிப்புக்குள் சில துன்பங்களும் மறைந்துள்ளன.
நீங்கள் — போராடிக்கொண்டிருக்கிறீர்கள்.
நீங்கள் தளரவில்லை — தாங்கிக்கொண்டிருக்கிறீர்கள்.
நீங்கள் தனியாக இல்லை — உங்கள் கனவு வாழ்க்கைக்கான பாதையில் உள்ளீர்கள்.
தனிமை உங்களை உடைக்கவில்லை... அது உங்களை உருவாக்கி இருக்கிறது.
வாழ்க வளமுடன்
என்றும் அன்புடன்

நன்றி - ஆனந்தி

# வசந்'தீ'



ஒவ்வொரு நாளும் கணவன் விவேக்கின் பேச்சு வசந்தியை தீயாய்ச் சுட்டது.

உருகி உருகி காதலித்து கல்யாணம் செய்து கொண்டு ஒன்றும் காணவில்லை. ஒரு பிரயோசனமும் இல்லை என்றானது.

ஒவ்வொன்றிலும் குறை கண்டு பிடித்தான். இரண்டாவது குழந்தையும் பெண்ணாக பிறந்ததும் சலித்துக் கொண்டான்.

அவன் பெற்றோரும் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் புரிந்து கொள்ளவில்லை.

எல்லாவற்றிலும் ஒரு மூர்க்கத்தனம். குத்திக் கிழிக்கும் கேள்விகள். முடியவில்லை வசந்தியால்.

விவேக்கின் இந்த செய்கைக்குப் பின்னால் என்ன உள்ளது என்று யோசிக்கலானாள்.

"என்னாச்சுங்க, எதுக்கு இப்படி எல்லாத்துக்கும் கோபப்படுறீங்க" என்றாள் வசந்தி.

"ஒன்னுமில்ல, ஏன் ஒரு மனுஷன் கோபப்படக்கூடாதா? என்னக் கேள்வி இது?" என்றான் ஒன்றும் நடக்காத மாதிரி.

"ஹாய் தீபா, எப்படியிருக்கீங்க?" -- வசந்தி.

"என்ன மேடம் அதிசயம், நீங்க போன் பண்றீங்க?" -- தீபா.

"ரொம்ப நாளாச்சேன்னு பண்ணேன் மா. சாய்ந்தரம் மீட் பண்ணலாமா?" கேட்டாள் வசந்தி.

"ஓ ஷ்யூர். நா இன்னிக்கு லீவுதான். எப்ப வேணாலும் மீட் பண்ணலாம்" என்று தீபா சொன்னதும் வசந்திக்கு சற்று ஆறுதலாக இருந்தது.

விவேக்கிற்கு தெரியாமல் அவனுடன் வேலை பார்க்கும் தீபாவை சந்திக்க அரிய வாய்ப்பு. முடிவு செய்து விட்டாள்.

"தீபா இங்க, ரைட் கார்னர்ல, வாங்க வாங்க" என்று போனை வைத்தாள்.

இருவரும் அந்த கோயில் பிரகாரத்தின் உள்ளே ஒரு ஓரமாய் அமர்ந்தார்கள்.

"நேரவே விஷயத்திற்கு வறேன். ஆபீஸ்ல எதானும் பிரச்சினையா?" என்றாள்.

எதைப் பற்றிக் கேட்கிறாள் என்று தெரியாமல் எதையும் உளறிவிடக் கூடாது என்று உறுதியாக இருந்தாள் தீபா.

"என்னாச்சு மேம்? என்ன கேக்கறீங்க?" என்றாள்.

"கொஞ்ச நாளாவே இவர் சரியில்லை. ரெண்டாவது கொழந்தைப் பொறந்ததுலேநாதே ரொம்ப சரியில்லை. நானும் லீவு முடிச்சு ஆபீஸ் போக ஆரம்பிக்கணும். அவங்க அம்மா, அப்பா கொழந்தைங்கள பாத்துப் பாங்க. அது பிரச்சினை இல்லை. ஆனா இவரோட பேச்சு, கோவம் எல்லாமே வீடே நிம்மதி இல்லாம இருக்கு" வருத்தப்பட்டாள் வசந்தி.

"எப்படி சொல்றதுன்னு தெரில மேம். ஆனா ஆபீஸ்லயும் பிராப்ளம்தான். கொஞ்சம் ஸ்டாப்களை அனுப்பிடப் போறாங்க. இன்னும் முடிவாகல. இருந்தாலும் ரெண்டு மூனு பேர் லிஸ்ட்ல இருக்காங்க. அதாவது நெறைய பேமண்ட் வாங்கறவங்கள எடுத்துட்டு ப்ரெஷ்ஷர்ஸ் எடுக்கப் போறாங்க" என்றாள் தீபா.

சொரேர் என்றது வசந்திக்கு. திருமணமாகி பத்து வருடங்கள் கழித்து ஒரு பெண்ணும், பனிரெண்டாவது வருடத்தில் ஒரு பெண்ணும் பிறந்தால்? யோசிக்கலானாள். "இவர் பேர் லிஸ்ட்ல இருக்கா?" கேட்டாள் வசந்தி.

"முதல் பேரே அவர்தான் மேம்" என்றாள் தீபா.

"சரி வாமா, சாமி தரிசனம் பண்ணிட்டு ப்ரசாதம் வாங்கிட்டுக் கௌம்பலாம்" என்றாள்.

வீட்டிற்கு வந்ததும் வசந்தியின் நடை, உடை, பாவனையெல்லாம் மாறியது. குழந்தைகளைக் கடிந்து கொள்வதும், மாமனார் மாமியாரிடம் எதிர்த்துப் பேசுவதும், கணவரை யாரோ போல நடத்துவதும் அமர்க்களப்பட்டது.

ஒரு வாரம் போனது. யாருக்கும் ஒன்றும் புரியவில்லை. விவேக் என்ன செய்வதென்று புரியாமல் தவித்தான்.

கடைசியில் பொறுக்க முடியாமல்"என்னாச்சு? ஏன் இப்படி நடந்துக்கற?" என்று கேட்டான் விவேக்.

கண்களில் கோபம் பொங்க, "ஏன் ஒங்களுக்கு மட்டும்தான் கோபம் வருமா? எங்களுக்கெல்லாம் வராதா?" என்று படபடவென கேட்டாள் வசந்தி.

அன்று அலுவலகத்திற்கு லீவு போட்டுவிட்டு வசந்தியை அழைத்துக் கொண்டு வெளியே போனான். இருவரும் ஒரு பார்க்கில் அமர்ந்தனர்.

"என்னாச்சு மா? என்ன பிரச்சினை? மெதுவாகக் கேட்டான்.

"நீங்க மொதல்ல ஒங்கப் பிரச்சினையை சொல்லுங்க" என்றாள்.

எல்லாவற்றையும் சொன்னான்.

"இந்த வேலைப் போனா? ஒங்ககிட்ட படிப்பு இல்லையா? திறமை இல்லையா? இல்ல நம்பிக்கை இல்லையா?" சற்று ஆவேசமாகக் கேட்டாள். கண்கள் சிவந்து போயிருந்தது.

"நானும்தானே வேலைக்குப் போறேன். அத்தை மாமா அவங்கப் பென்ஷன் வாங்கறாங்க. நம்மள கஷ்டப்படுத்தறது கூட இல்லை".

"தன்னம்பிக்கை வேணுங்க. யார்கிட்டயும் எதையும் சொல்லாம, இப்பிடி எல்லார்கிட்டயும், ஏன் அந்தப் பச்சைக் குழந்தையக்கூட கொஞ்சாம, என்ன மனுஷன் நீங்க?" என்று கேட்டாள்.

அவளது உள்ளுணர்வு அவனது கோழைத்தனத்தை வெறுத்தது.

"வசந்தி ப்ளீஸ், கோவிக்காத. எல்லாரும் பாக்கறாங்க. எனக்குப் புரியுது. தப்புதான். பாத்துக்கலாம் விடு. நீ கவலைப் படாத" என்று சமாதானப் படுத்தினான்.

வீட்டிற்கு வந்ததும் குழந்தைகளைக் கொஞ்சினான். மிகப்பெரிய பலம் வந்தாற்போல் உணர்ந்தான். மறுநாள் அவன் ஆபீஸ் சென்றதும் பெரியவர்களுக்குச் சொல்லிப் புரிய வைத்தாள். கூடவே தன் செயல்களுக்கும் மன்னிப்புக் கேட்டாள். இனி என்ன? எல்லாம் இன்பமயம் தான்.

**வி.பிரபாவதி**
மடிப்பாக்கம்

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*காதலன் : "டியர் என்ன இவ்வளவு வருஷமா காதலிச்சுட்டு கல்யாணம் செஞ்சுக்க மறுக்கிறியே, ஏன் உன் மனசுல வேற யாராவது இருக்காங்களா?"*

*காதலி : "ஆமாம் டியர், எனக்குன்னு ஒருத்தர் பொறக்காமலா இருப்பாங்க?"*

*காதலி : "ஏன் டியர் நீங்க என்ன மட்டும்தான் லவ் பண்றீங்களா?"*

*காதலன் : "நிச்சயமா நீதான், ஏன்னா நேத்திக்குதான் லிஸ்ட்ட செக் பண்ணினேன்"*

# தினம் ஒரு சமையல்



## தினை அரிசி பொங்கல்

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| தினை அரிசி | -1 கப் |
| மண்டை வெல்லம் | -1.1/2 கப் |
| ப்பாசிப்பருப்பு | -1/4 கப் |
| முந்திரி பருப்பு | -10 |
| நெய் | -தேவையான அளவு |

செய்முறை:



முதலில் தினை அரிசி மற்றும் பாசிப்பருப்பை 10 நிமிடங்கள் தண்ணீரில் ஊற வைத்துக் கொள்ள வேண்டும்.
மண்டை வெல்லத்தை சிறு துண்டுகளாக உடைத்து வைத்துக் கொள்ள வேண்டும்.
10 நிமிடங்கள் கழித்து தினை அரிசி மற்றும் பாசிப்பருப்பை நீரை வடித்து ஒரு குக்கரில் போட்டு மூன்று டம்பளர் அளவு தண்ணீர் சேர்த்து 5 விசில்கள் வைக்க வேண்டும்.
அரிசி வெந்ததும் உடைத்து வைத்த மண்டை வெல்லத்தை சேர்த்து நன்கு கிளறவும்.
பின் ஒரு கடாயில் 2 ஸ்பூன் நெய் சேர்த்து முந்திரி பருப்பை சேர்த்து பொன் நிறமாக வறுக்க வேண்டும்.
பின் வறுத்த முந்திரி பருப்பை பொங்கலுடன் சேர்த்து கிளறவும்.
பின் பொங்கலுடன் தேவையான அளவு நெய் சேர்த்து இறக்கினால் சுவையான தினை அரிசி பொங்கல் தயார்.

## சக்கரவர்த்திக் கீரை நன்மைகள்



ஆரோக்கியமான உணவு பழக்கம், தினசரி உடற்பயிற்சி என்று உடல் எடையை குறைக்கவும், உடலை கட்டுக்கோப்பாக வைத்துக் கொள்ளவும் நாம் பல முயற்சிகளை மேற்கொண்டு வந்தாலும், குளிர்காலம் வந்தவுடன் அதற்கெல்லாம் தடங்கல் ஏற்பட தொடங்கும்.

பொதுவாகவே குளிர்காலத்தில் உணவின் மீது நமக்கு அதீத நாட்டம் ஏற்படும் மற்றும் உடற்பயிற்சி செய்ய போதுமான நேரம் கிடைக்காது. காலைப் பொழுதில் சூரியன் மிக தாமதமாக உதிக்கும் நிலையில் நாம் நீண்ட நேரத்திற்கு தூங்குவதை தவிர்க்க இயலாது. இத்தகைய சூழலில் நம் உடல் எடை அதிகரிக்கின்ற நிலை ஏற்படும். ஆனால் அதை தவிர்ப்பதற்கு சக்கரவர்த்தி கீரை ஒன்றே போதுமானது. இந்தக் கீரையின் மூலமாக வேறு என்னென்ன பலன் கிடைக்கும் என்பதை இப்போது பார்க்கலாம்.

ஊட்டச்சத்து நிறைந்தது : குளிர்காலத்தில் மிக அதிகப்படியாக விளையக்கூடியது இந்த சக்கரவர்த்தி கீரை. சுவையிலும் இதன் தன்மை அபாரமாக இருக்கும். அதேபோல ஊட்டச்சத்துக்கள் நிறைவாக உள்ளன. விட்டமின் ஏ, விட்டமின் சி, விட்டமின் கே போன்ற விட்டமின்களும், கால்சியம், இரும்புச்சத்து, மெக்னீசியம் போன்ற மினரல்களும் இந்த கீரையில் நிறைவாக கிடைக்கும். இது நம் உடலுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை கொடுக்கும் மற்றும் எலும்புகளை வலுவாக வைத்திருக்கும்.

நோய் எதிர்ப்பு சக்தி : எண்ணற்ற ஆண்டி ஆக்ஸிடென்ட் மற்றும் வைட்டமின் சி சத்து கொண்ட சக்கரவர்த்தி கீரை நம் உடலுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை கொடுக்கும். குறிப்பாக தொற்றுகள் மற்றும் கிருமிகளிடம் இருந்து தற்காத்துக் கொள்ள முடியும். அதிலும் சுவாசப் பிரச்சனை ஏற்படுகின்ற குளிர்காலத்தில் இதை அவசியம் எடுத்துக் கொள்ளலாம்.

செரிமான மேம்பாடு : சக்கரவர்த்தி கீரையில் நார்ச்சத்து மிகுதியாக உள்ளது. இது நம் உடலில் செரிமான சக்தியை மேம்படுத்தும் மற்றும் குடல் நலனை சிறப்பாக வைத்திருக்க உதவும். மலச்சிக்கல் பிரச்சனை இருப்பவர்கள் சக்கரவர்த்தி கீரையை அடிக்கடி உணவில் சேர்த்து வந்தால் அதிலிருந்து தீர்வு கிடைக்கும்.

இதய நலன் மேம்படும் : இந்தக் கீரையில் உள்ள நார்ச்சத்து நம் கொலஸ்ட்ரால் அளவுகளை குறைக்கும் மற்றும் இதில் உள்ள பொட்டாசியம் சத்து உயர் ரத்த அழுத்தத்தை தடுக்க உதவியாக இருக்கும். ஆக மொத்தத்தில் சக்கரவர்த்தி கீரை சாப்பிடுவது இதய நலனை மேம்படுத்த உதவும்.

ஊட்டச்சத்து நிறைந்தது : குளிர்காலத்தில் மிக அதிகப்படியாக விளையக்கூடியது இந்த சக்கரவர்த்தி கீரை. சுவையிலும் இதன் தன்மை அபாரமாக இருக்கும். அதேபோல ஊட்டச்சத்துக்கள் நிறைவாக உள்ளன. விட்டமின் ஏ, விட்டமின் சி, விட்டமின் கே போன்ற விட்டமின்களும், கால்சியம், இரும்புச்சத்து, மெக்னீசியம் போன்ற மினரல்களும் இந்த கீரையில் நிறைவாக கிடைக்கும். இது நம் உடலுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை கொடுக்கும் மற்றும் எலும்புகளை வலுவாக வைத்திருக்கும்.

நோய் எதிர்ப்பு சக்தி : எண்ணற்ற ஆண்டி ஆக்ஸிடென்ட் மற்றும் வைட்டமின் சி சத்து கொண்ட சக்கரவர்த்தி கீரை நம் உடலுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை கொடுக்கும். குறிப்பாக தொற்றுகள் மற்றும் கிருமிகளிடம் இருந்து தற்காத்துக் கொள்ள முடியும். அதிலும் சுவாசப் பிரச்சனை ஏற்படுகின்ற குளிர்காலத்தில் இதை அவசியம் எடுத்துக் கொள்ளலாம்.

# அஜித்துடன் இணையும் இரண்டு முன்னணி ஹீரோக்கள்.. AK 64 படத்தின் மாஸ் அப்டேட்



குட் பேட் அக்லி படத்தின் மாபெரும் வெற்றியை தொடர்ந்து AK 64 படத்தை ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கவுள்ளார். அஜித் - ஆதிக் கூட்டணியில் உருவாகும் இப்படத்தின் அறிவிப்பு விரைவில் வெளிவரும் என்றும், படப்பிடிப்பு அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் துவங்கும் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

அனிருத் இப்படத்திற்கு இசையமைக்கவுள்ளார். மேலும் ரோமியோ பிக்சர்ஸ் ராகுல் இப்படத்தை தயாரிக்கிறார். இப்படத்திற்காக நடிகர் அஜித் ரூ. 183 கோடி சம்பளம் வாங்கியுள்ளதாக தகவல் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில், AK 64 படத்தின் லேட்டஸ்ட் அப்டேட் ஒன்று வெளியாகியுள்ளது. இப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க மக்கள் செல்வன் விஜய் சேதுபதி மற்றும் ராகவா லாரன்ஸ் ஆகிய இருவரிடம் பேச்சு வார்த்தை நடந்து வருகிறதாம்.

இவர்கள் இருவரில் ஒருவர் அந்த ரோலில் நடிக்க அதிக வாய்ப்பு என்கின்றனர். மேலும் இது வில்லன் கதாபாத்திரமா அல்லது வேறு ஏதேனும் முக்கிய வேடமா என தெரியவில்லை. பொறுத்திருந்து பார்ப்போம் இதுகுறித்து எப்போது அதிகாரப்பூர்வமான அறிவிப்பு வெளியாகிறது என்று.



நடிகை அனுபமா பரமேஸ்வரன் அழகிய ஸ்டில்கள் இதோ.

வெள்ளை நிற உடையில் கியூட் புகைப்படங்கள்.

சினிமா

# தமிழில் மீண்டும் அனிமேஷன் படமா?.. சௌந்தர்யா ரஜினிகாந்த் சொன்னது என்ன?



தமிழ் சினிமாவில் சூப்பர் ஸ்டார் ரஜினியின் இளைய மகள் என்ற அடையாளத்தோடு நுழைந்தவர் சௌந்தர்யா ரஜினிகாந்த். பின் தன் உழைப்பால் முன்னேறி தற்போது திரைப்பட இயக்குநர், கிராபிக் டிசைனர், தயாரிப்பாளர் என பன்முகம் கொண்டு திகழ்ந்து வருகிறார்.

கடந்த 2014ம் ஆண்டு வெளியான கோச்சடையான் படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமானவர். பின் தனுஷை வைத்து வேலையில்லா பட்டதாரி படத்தின் 2ம் பாகத்தை இயக்கி இருந்தார். இந்நிலையில், தமிழில் மீண்டும் ஒரு அனிமேஷன் படம் எடுக்கப்படுமா? தமிழில் முருகனின் 'சூரசம்ஹாரம்' குறித்து ஒரு அனிமேஷன் படம் எடுத்தால் என்ன?' நிச்சயம் அது வெற்றி பெரும் என்று ரசிகர் ஒருவர் சௌந்தர்யாவிடம் கேள்வி எழுப்பினார்.

அதில், " நீங்கள் கூறுவது மிகவும் உண்மை, அனிமேஷனுக்கு அதற்கான அங்கீகாரம் இறுதியாகக் கிடைத்துவிட்டது. இது ஒரு ஆரம்பம் மட்டுமே என்று நான் உறுதியாக நம்புகிறேன். இறையருளால், இன்னும் பல அற்புதமான படங்கள் வர உள்ளது" என்று தெரிவித்துள்ளார்.

Published by R.S ROSHINE Printed by **R.S. ROSHINE** On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002. and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: **R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: anandabhaskarnews@gmail.com**